தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 2, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 ஏப்ரல் 15, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு".

ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதன்மூலம் புகழ் உண்டாக வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர உயிருக்கு உறுதி தருவது வேறெதுவும் இல்லை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

210—

புதை மின்வடங்கள்

***20653—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் மின் கம்பிகளுக்குப் பதிலாக புதை மின்வடங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரையில் மின்கம்பிகளை பூமிக்கடியில் புதை மின்வடங்களாகப் பதிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் 10 இலட்சத்துக்கு மேல் மக்கள் வாழக்கூடிய நகரம். அங்கே மின் கம்பிகளுக்குப் பதிலாக புதை மின்வடங்கள்மூலமாக, பூமிக்கு அடியில், கேபிள்மூலமாகக் கொண்டு சென்றால், விபத்துகளைத் தவிர்க்க முடியும். அதேபோல, மின் திருட்டு கடந்த காலத்திலே நடைபெற்றது. அதையும் தடுப்பதற்கு வழி ஏற்படும். அதேபோல, மின் கசிவு பெரிய அளவிலே இன்றைக்கு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. அதையும் தடுக்க முடியும். எனவே, விபத்திலிருந்து தடுப்பதற்கு, பூமிக்கு அடியிலே மின்வடங்களைக் கொண்டுசெல்வதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதையும், அதேபோல, மதுரை, அனுப்பானடியில் 110 கிலோ வாட் பவர் லைன், குடியிருப்புப் பகுதிக்குள் செல்கிறது. இதனால், கடந்த 8 ஆண்டுகளில், 10–க்கும் மேற்பட்டவர்கள் மரணம் அடைந்துவிட்டார்கள். இதனை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொன்னால், ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் தேவை என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை நுகர்வோரிடம் வாங்குவது சாத்தியம் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மாற்றித் தருவதற்கு முன்வருவாரா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் மின்கம்பிகளை பூமிக்கடியில் Underground cable–புதைவடங்களாக, மாற்றுவதற்கு ஏறத்தாழ 35 கோடி ரூபாய் செலவாகலாம் என்று தோராயமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. 140 கிலோ மீட்டர் தூரத்திற்கு எச்.டி, உயரழுத்த Underground cable–களை பதிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு 'பணம் பங்கேற்புத் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் மாநகராட்சிதான் அதற்குரிய பணத்தைக் கட்ட வேண்டும். மாநகராட்சி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு விண்ணப்பத்தை அளிக்க வேண்டும். மின்கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றுவதற்கு உரிய செலவினை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று ஒப்புதல் கொடுத்தால், உடனடியாக மதிப்பீடு தயார் செய்து, மாநகராட்சிக்கு வழங்கப்படும். அந்த மதிப்பீட்டிற்கான பணத்தை மாநகராட்சி கட்டியவுடன், அதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்று, அவனியாபுரம் பேரூராட்சி பகுதியில் இருக்கும் 110 உயர் அழுத்த மின் கோபுரங்களை அகற்ற வேண்டும், மாற்றி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைவிடுத்திருக்கிறார்கள். பொதுவாக, மின்கம்பங்களை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அவை உயரழுத்த மின்கம்பங்களாக இருந்தாலும் சரி, தாழ்வழுத்த மின்கம்பங்களாக இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்ட பயனாளிதான் அதற்குரிய, அதாவது மாற்றியமைப்பதற்கான கட்டணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது விதி. ஆகவே, அந்த விதிமுறைக்குட்பட்டுத்தான், தமிழ்நாடு மின்சார வாரியம், அந்தப் பயனாளிகள், அந்தப் பகுதியிலே பணத்தைக் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதை நாங்களும் அறிவோம். அவற்றை மாற்றியமைப்பதற்கு ஏறத்தாழ ஒரு கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒட்டுமொத்தமாக பயனாளிகள் அவர்கள் செலவாக ஏற்றுக்கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை என்பது உண்மைதான். எனவேதான், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு அதற்குரிய பணத்தைக் கட்டினால், மின் கம்பங்களை மாற்றியமைப்பதற்குரிய

நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பைத் தொடர்பு கொண்டு, உள்ளாட்சி அமைப்புகள்மூலமாக உரிய செலவினத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே சித்திரைத் திருவிழா தொடங்கிவிட்டது. தேரோட்டம், பூ பல்லாக்கு, எதிர் சேர்வை, கள்ளழகர் வைகையாற்றில் அருள்புரிதல் உள்ளிட்ட திருவிழா, 10 நாட்கள் விமரிசையாக அங்கே நடைபெறவிருக்கிறது. 10 இலட்சம் பக்தர்கள் வரை வரவிருக்கிறார்கள். சென்ற ஆண்டைப்போல இந்த ஆண்டும் தடையில்லா மின்சாரத்தை வழங்கினால், அதன்மூலமாக பக்தர்கள் கள்ளழகரைத் தரிசிக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, சென்ற ஆண்டைப்போல, இந்த ஆண்டும் தடையில்லா மின்சாரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் நடைபெறுகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க, பிரசித்திபெற்ற சித்திரைத் திருவிழாவின்போது, தடையில்லாத மின்சாரம் வழங்குவதற்கு எந்த அளவுக்கு சாத்தியம் இருக்கிறதோ, அந்த அளவுக்கு வழங்குவதற்கு நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளில் மின் கம்பிகளுக்குப் பதிலாக புதை மின்வடங்கள் அமைக்கும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து, தமிழகத்தில் இருக்கின்ற பேரூராட்சிகளுக்கும், ஊராட்சிப் பகுதிகளுக்கும் அதைப்போன்ற புதை மின்வடங்கள் அமைக்கும் செயற்குறிப்பு மின்சார வாரியத்திடம் உள்ளதா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாதுரை அவர்களுடைய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, இதுசம்பந்தமாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். எந்நெந்த இடங்களில் புதை மின்வடங்கள் அமைக்க வேண்டும், மின் கம்பிகளை பூமிக்கடியில் புதை மின்வடங்களாக மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்புகள் 'பணம் பங்கேற்புத் திட்டம்' என்ற திட்டத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொண்டால், அதற்குரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியமே தன்னுடைய சொந்தப் பொறுப்பில் அதைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறார் என்று நினைக்கின்றேன். அப்படியென்றால், தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலைக்கேற்ப, நிதிநிலை சீரடைந்ததற்குப் பிறகு, அதைப்பற்றி அரசு சிந்திக்கும், பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரத ரத்னா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது,

[2013 ஏப்ரல் 15

அரண்மனைப்புதூரிலிருந்து வெள்ளிமலைக்கு, அங்கு வாழ்கிற பழங்குடி மக்களின் குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கினார்கள். அப்படி மின்சாரம் வழங்குகின்றபொழுது, வன விலங்குகளால் மின் கம்பங்கள் பாதிக்கப்படுவதால், மின்சாரம் முற்றிலும் துண்டிக்கப்படுகிறது. பலமுறை கோரிக்கை வைத்தோம். அங்கு Post வழியாக மின்சாரம் சென்றால் வனவிலங்குகள் பாதிக்கப்படுவதால், கேபிள்மூலமாக அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கினால் 15–க்கும் மேற்பட்ட பழங்குடி மக்களின் குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதிக்குக் கேபிள்மூலமாக மின்சாரம் வழங்குவதற்கு முன்வருமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற ஆண்டிப்பட்டித் தொகுதி, வெள்ளிமலை மலைப் பகுதியிலே இருக்கின்ற மின்சார வழித்தடத்தை, பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற நடைமுறைச் சிக்கல் என்னவென்று சொன்னால், அந்தப் பகுதி அடர்ந்த காட்டுப் பகுதி என்பதாலும், அங்கு வனத் துறைக்குச் சொந்தமான பகுதி குறுக்கிடுமானால், புதைவடங்களாக மாற்றுவதற்கு, வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதி பெறவேண்டியிருக்கிறது. ஆகவே, பொதுவாக வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினர் இப்படிப்பட்ட பணிகளுக்கு அனுமதி கொடுப்பதில்லை. ஆகவேதான், மலைப் பகுதிகளில் இந்தப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை இன்றைக்கு மத்திய அரசினுடைய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் அனுமதி கிடைத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அதைப் பற்றிச் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 ஏப்ரல் 15]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் நத்தம் தொகுதி போன்ற பகுதிகளில் கம்பி வயர்கள்மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. குறிப்பாக நத்தம், கொட்டாம்பட்டி போன்ற பகுதிகளிலுள்ள விவசாயிகளின் ஊர்களுக்கு மின்சாரம் வயர்களின்மூலம் போகின்றபோது, அந்தப் பகுதிகளில் தென்னை, மா மரங்கள் 90 சதவிகிதம் இருப்பதால், அதன் வழியே அலுமினியக் கேபிள்மூலம் மின் கம்பங்கள் நட்டு மின்சாரம் கொண்டுசெல்லப்படுகிறது.

இதில் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன. காற்றடிக்கும்போது, மரக்கிளைகள் உடைந்து விழுந்து மின் கம்பி அறுந்து, மின் விநியோகம் துண்டிக்கப்படுகிறது. இரண்டாவது அலுமினியக் கம்பியாக இருக்கின்ற காரணத்தால், மழைக் காலங்களில் அதில் தண்ணீர் படிந்து, சூறாவளிக் காற்றடிக்கும்போது, அந்தக் கம்பிகளில் மண், செடியின் சத்தைகள் படிவதால், மின் கம்பிகள் துருப் பிடிப்பதால் வோல்டேஜ் பிரச்சினையும் ஏற்படுகின்றது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தக் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்காகவும், ஏழையெளிய மக்களுக்காகவும் அலுமினிய மின் கம்பிகளை மாற்றிவிட்டு, மரங்கள் நிறைந்த அந்தப் பகுதிகளுக்கு மட்டும் புதை மின்வடங்கள் மூலமாக மின்சாரத்தைக் கொண்டு செல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற யோசனை நல்ல யோசனைதான். பொதுவாக, அடர்ந்த தோப்புப் பகுதிகள், காட்டுப் பகுதிகளின் வழியே மின் கம்பிகளின்மூலம் மின்சாரம் கொண்டு செல்வதைவிட அதை பூமிக்கு அடியில் புதை மின்வடங்கள்மூலம் கொண்டு செல்வதில் பாதுகாப்பு இருக்கிறது; பல்வேறு நன்மைகள் இருக்கின்றன என்பது

உண்மைதான். ஆனாலுங்கூட, அதற்கு ஆகின்ற செலவு மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலைமை சீரடைந்தால்தான், அதைப் பற்றி யோசிக்க முடியும். அதிக நிதி தேவைப்படுகின்ற அந்தப் பெருந்திட்டத்திற்கு, நிதிநிலை சீராகும்போது, பிற்காலத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அம்மா அவர்களிடம் உரிய ஆணைகளைப் பெற்று, அதைப் பற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் புதைவடம் குறித்த பிரச்சினையை எழுப்பியிருக்கிறேன். சென்னை நகரில், பழைய சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அந்தப் பகுதிக்குள்ளே மின்சாரத்தை ஏராளமான மின் கம்பிகளால் கட்டப்பட்ட மின் கம்பிகள்மூலமாக எடுத்துச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அதனால் மரங்களை நடமுடியவில்லை, மரங்களை வெட்ட வேண்டியிருக்கிறது. முதல் மாடியில் வசிப்பவர்கள் பெரும் அபாயத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களால் துணிகூட காயப்போட முடியவில்லை. குழந்தைகளை விளையாட மாடிக்கு அனுப்ப முடியவில்லை என்கிற நிலையிருக்கிறது. ஆகவேதான், புதை மின்வடங்கள்மூலம் இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று சொன்னேன். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருந்தீர்கள். இப்போது சென்னை நகரத்திற்குள், ஏற்கெனவே நகரத்திற்குள் புதை மின்வடங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிற சூழ்நிலையில், அதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தப் பணிகளை நிறைவேற்றுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில், மின் கம்பிகளை பூமிக்கடியில் புதை மின்வடங்களாக மாற்றும் பணிகள் ஏறத்தாழ முடிவடைந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த விரிவாக்கப் பகுதிகளில்

2013 ஏப்ரல் 15]

இன்னும் எந்தெந்தப் பகுதிகளில் மின் கம்பிகள் புதை மின்வடங்களாக மாற்றப்படாமல் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து, அவற்றையெல்லாம் படிப்படியாக, விரைவில் பூமிக்கடியில் புதை மின்வடங்களாக மாற்றுகின்ற பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

211—

மானிய விலையில் நிலக்கரி

***3895—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல் சூளைகளுக்கு மானிய விலையில் நிலக்கரி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மைய அரசின் கோல் இந்தியா நிறுவனமானது, தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆண்டிற்கு 60,000 மெட்ரிக் டன் நிலக்கரியை விநியோகம் செய்ய, சிட்கோ நிறுவனத்தை முகவர்களாக நியமித்திருக்கிறது. அதனடிப்படையில் தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்களில் சிட்கோ நிறுவனம் விளம்பரம் செய்தது. 2 தொழில் முனைவோர்கள் செங்கல் சூளைக்கு ஆண்டுக்குத் தலா 800 மெட்ரிக் டன் நிலக்கரியும், 3 தொழில் நிறுவனங்கள் 6,500 மெட்ரிக் டன் நிலக்கரியும் வேண்டி இசைவு தெரிவித்துள்ளார்கள். கோல் இந்தியா லிமிடெட் நிறுவனம் ஒதுக்கீடு செய்த நிலக்கரியில், குறைந்தபட்சம் 50 சதவிகிதம் நிலக்கரி வாங்க தொழில் முனைவோர் விருப்பம் தெரிவிக்காததாலும், 2 செங்கல் சூளை தொழில் முனைவோர் மட்டுமே இசைவு தெரிவித்துள்ளதாலும், குறைந்தபட்சம்